விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 82 தை 28 றஜப் 24 இதழ்: 290
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 10-2-1991

# கொடூர விமானத்தாக்கு பெண்மணி தலை சிதறிபலி!

## ஐவர் காயம்: 20 வீடுகள் சேதம்

[நமதுநிருபர் ஈழத்தமிழ்மணி]

யாழ். கந்தர்மடம் சொக்குவில் பகுதிகளில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சினால் பெண்மணி ஒருவர் தலை சிதறிய நிலையில் பலியானார்; ஐவர் படுகாயமடைந்தனர்.

மூன்று வீடுகளும், ஒரு வர்த்தக நிலையமும் தரைமட்டமானதுடன் இருபது வீடுகள் உட்பட ஒரு ஆலயமும் சேதமடைந்தன.

நேற்றுக்காலை 4 மணியளவில் கந்தர்மடம் மணல்தரை வீதியில் இடம்பெற்ற விமா

(2-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் தாக்குதல் பல படையினர் பலி

[திருமலை]

திருமலை மாவட்டம் புறப்பிட்டி முகாமிலிருந்து சலப்பையாறு பகுதி நோக்கிச் சென்ற இராணுவ அணிமீது

(2-ம் பக்கம் பார்க்க)

# ● இலங்கைப் பிரச்னையில் இந்தியாவின் கடமை முடிந்தது

# அகதிகளால் எமக்கு சிக்கல்

## - பிரதமர் சந்திரசேகர் பேட்டி -

[புதுடில்லி]

**இலங்கை உள்நாட்டுப் பிரச்சனையில் இந்தியாவின்கடமை முடிவடைந்து விட்டது. தமிழகத்தில் தங்கியுள்ள தமிழ் அகதிகளால் இந்தியாவுக்கு பல பிரச்சனைகள் ஏற்படுவதாக இந்தியப் பிரதமர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.**

இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் இருவருக்குப் புதுடில்லியில் வைத்து வழங்கிய பேட்டியில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை இந்தியா நிறைவேற்றிவிட்டது; ஏதாவது சரத்துகள் நிறைவேற்றப்படாதிருப்பின் அது இலங்கையினதும் அந்நாட்டு மக்களினதும் கடமை ஆகும்; இந்த விடயத்தில் இந்தியா தலையிட வேண்டுமென இலங்கை மக்கள் கோரினால் அன்றி இப்பிரச்சனையில் இந்தியா ஒருபோதும் தலையிடாது;

(2ம் பக்கம் பார்க்க)

## தனியார் கல்விநிலையங்கள் திங்கள், வெள்ளி நாட்களில் மூடப்படவேண்டும்

(யாழ்ப்பாணம்)

''சகல தனியார் கல்வி நிறுவனங்களும் திங்கள், வெள்ளி ஆகிய இரு நாட்களும் விடுமுறை நாட்களாகக் கருதி மூடிவிடுதல் வேண்டும்'' என்று தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

''பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மட்டும் பகல் நேர வகுப்பு நடத்தலாம்: சனிக்கிழமை வழமைபோல் இயங்கலாம்: எம்மிடம் பதிவு செய்யப்பட்ட 344 கல்வி நிறுவனங்கள் தவிர எந்த தனிப்பட்ட வகுப்புகளும்

(2ம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரின் நிலை மிகவும் பரிதாபமானது

(புதுடில்லி)

காங்கிரஸ் தலைவர் திரு: ராஜீவின் வற்புறுத்தலில் தமிழக அரசை கலைத்த பிரதமர் திரு. சந்திரசேகரை எந்நேரமும் கவிழ்க்க திரு. ராஜீவ் காந்தி முனைந்து வருவதன் மூலம் பிரதமர் மிகப்பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள

(2ம் பக்கம் பார்க்க)

## அ. தி. மு. க. இணையாது

(சென்னை)

தமிழகத்தில் பிளவடைந்துள்ள அ. தி. மு. க. பிரிவுகள் ஒருபோதும் இணையாதென மற்றொரு பிரிவின் தலைவர் திரு. திருநாவுக்கரசு தெரிவித்துள்ளார்,

தமிழக சட்டசபை தேர்தலில் எந்தெந்த கட்சிகளுடன் கூட்டுசேர்வதென விரைவில் முடிவெடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் தமிழக

(2-ம் பக்கம் பார்க்க)

## 9 பல்கலைக்கழக கல்லூரிகள்

[கொழும்பு]

நாடுமுழுவதிலும் இவ்வருட நடுப்பகுதியில் 9 பல்கலைக்கழக கல்லூரிகள் அமைக்கப்பட்டுவிடுமென கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

1991, 1992-ஆம் ஆண்டு

(2-ம் பக்கம் பார்க்க)

## விமான தாக்குதல் குறித்து சர்வதேச அமைப்புகள் கண்டனம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் 'சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களின்' வாகனங்கள் விமானக்குண்டு வீச்சுக்கு இலக்காகி வருவதையிட்டு பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது;

இந்த கண்டனத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் ஐ. நாவின் அகதிகளுக்கான அமைப்பும், வேறு சில சர்வதேச அமைப்புகளும் தெரிவித்துள்ளன,

எனினும் இந்த குற்றச்சாட்டை இலங்கை அரசு மறுத்துள்ளது. [சி]

## வல்வை விமானத்தாக்குதல் ஐ. நாவுக்கு மகஜர்

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில்கடந்த மாதம் 20-ம்திகதி முதல் 23-ம் திகதி வரை இடம்பெற்ற கொடூர விமானத் தாக்குதல் குறித்து ஐ. நா. செயலர், அணிசேரா நாடுகளின் தலைவர். பிரிட்டிஷ் பிரதமர் ஆகியோருக்குவிரிவான மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

அப்பகுதி முக்கிய பிரமுகர்கள் கையொப்பமிட்டு அனுப்பியுள்ள இந்த மகஜரில் சகல விபரங்களும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன;

(2-ம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியில் படைகள் உஷார் நிலையில்

(கொழும்பு)

தென்பகுதியில் முப்படையினரும் மிகுந்த உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதையும் காணாமல் போன ஆயிரக்கணக்கானவர்களினதும் நினைவாக கொழும்பில் 19-ம், 21-ம் திகதிகளில் பெரும் ஆர்ப்பாட்

(2ம் பக்கம் பார்க்க)

## ஈரான் சமாதான முயற்சி தெஹ்ரானில் ஈராக் உபஜனாதிபதி

(தெஹ்ரான்)

வளைகுடா யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர ஈரான் மேற்கொண்டுள்ள சமாதான முயற்சியில் கலந்துகொள்ள ஈராக் உப-ஜனாதிபதி 2-வது முறையாக தெஹ்ரான் வந்துள்ளார்.

ஈரானின் சமாதான முயற்சி

(2ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

மில்க்வைற் திரவ சவர்க்காரம் (Liquid Soap), வேப்பெண்ணெய் கைதடி ப.நோ.கூ. சங்கத்திலும் விற்பனைக்கு உண்டு. (எ-1090)

### தரன் ஸ்ருடியோ

றபர்சீல், கலர் கறுப்பு வெள்ளை படங்கள், பாஸ் போட், அடையாள அட்டை, 12''x10'' படங்கள் பிளாஸ் ரிக்போம், விளம்பரபோட் மற்றும் ஓவிய வேலைகள். 24, ஸ்ரான்லி வீதி, (ரெட்ணவீதி) யாழ்ப்பாணம். (கி-4302)

### சமூகக் கல்வி

விற்பனையாகின்றது! சமூகக் கல்வி-ஆண்டு:11 (புதியபாடத்திட்டம்) ஆக்கியோன்:- ந. தர்மபாலன். சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (கி-4318)

### ஜோதிடம்

சனிமாற்றம்எங்கும் கிடைக்கும். சனி ராகு கேது வியாழன் நேர்க்கோட்டினதும், 7 மாதச் செவ்வாயினதும் கெட்ட சஞ்சாரங்களும், 31-3-91) வரை குரு கேது சண்டாளப் பாவயோகங்களும் வலைகுடாப் போரை மோசமடையச் செய்து உலகில் பொருளாதார அழிவுகளையும், ஏற்படுத்தும் Prof. சத்தியதாஸன் ஞானம் ஸ்ரோர்ஸ் சித்தன்கேணி. (கி-4333)

## இலங்கைப் பிரச்சனை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில்தோன்றியுள்ள நிலைமையை எப்படி சமாளிப்பது என்பது இலங்கையைப் பொறுத்தவிடயம். இதுவிடயத்தில் இலங்கை அரசு உதவி கோரினால் மட்டுமே அதுபற்றி இந்தியா ஆலோசிக்கும். இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவுக்கு வருவதாலும் அங்குவந்தவர்களாலும் பலசிக்கல்கள் ஏற்படுகின்றது.

அயல் நாடு என்ற முறையில் இலங்கையில் தோன்றியுள்ள நிலைகுறித்து இந்தியா மிகுந்தகவலையடைந்துள்ளது. விடுதலைப் புலிகள் தொடர்பான பிரச்சினையை கையாள்வது குறித்து இலங்கை-இந்திய அரசுகளிடையே எந்தவித கூட்டுமுயற்சியும் இடையாது என்றும் கூறினர்.

## பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ், பல்கலைக் கழகத்தில் இன்று நடைபெறவிருந்த ஊழியர் தின விழாவும் பல்கலைக்கழகசேவையில் நீண்டகாலம் பணியாற்றியர்களுக்கான பாராட்டு விழாவும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 9 பல்கலைக் கழகங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

க. பொ. த.(உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவ, மாணவிகள் இக்கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவார்கள் (சி)

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

வாகனங்கள் சேதமுற்ற நிலையில், படுகாயமடைந்தவர்களுடன் படையினர் உடனடியாகத் தமது முகாம் திரும்பினர்.

கடந்த சில தினங்களாகக் கிழக்கில் இராணுவ அணிகள் புலிகளின் கடும் தாக்குதலுக்கு இலக்காகி வருவது குறிப்பிடத்தக்கது. (வி)

## தென்பகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டம் நடைபெறுவதையடுத்தே இவ்வேற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சகல பகுதிகளுக்கும் ராணுவம் போதியளவு அனுப்பப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தனியார் கல்வி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படமுடியாது; அமைப்புக்கு முரணான நடவடிக்கை எதுவாயினும் எமக்கு முன் அறிவித்தல் தரவேண்டும். கட்டுப்பாட்டுக்கு அமையாத நிறுவனங்கள் தண்டனைக்குள்ளாகி வருகின்றன. மாவீரர்களின் குடும்பத்தவர்களுக்கு இலவசக் கல்வி வழங்கப்பட வேண்டும்.''

---

# ஓராண்டு நினைவஞ்சலி.

## திருமதி சின்னவன் வள்ளி

தோற்றம்: 1910-09-22 மறைவு: 1990-01-21

திதி: 1991-02-10

மாதங்கள் உருண்டோடி வருடமாய் மாறினும்
மாறாதே எம்சோகம் உங்களை விட்டென்றுமே
மரணத்தால் உங்களை மாற்றிடினும்
சோகத்தால் எம்மை வருத்திடினும்
அன்பினால் உங்களைப் பார்க்க முடியவில்லையே

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

17, கலைநகர், அளவெட்டி தெற்கு. (கி 4341)

---

# பொன்னாலை
# ஸ்ரீ வரதராசப் பெருமாள் தேவஸ்தானம்

''திருட்டுத்தனமும் விஷமத்தனமும் நிறைந்த சில போலியான நபர்கள் மேற்படி தேவஸ்தானத்தின் பெயரைச் சொல்லி நேர்த்தி, யாகம், திருப்பணி என்ற பெயர்களில் பல இடங்களில் மக்களை ஏமாற்றிப் பணம் பறிப்பதாக அடியார்கள் பலர் எங்களுக்குப் புகார் செய்துள்ளார்கள்.

இப்படியான நபர்கள் உங்கள் வீடுகளுக்கு வரும் போது அவர்களை இனம்கண்டு அம்பலப்படுத்தித் தகுந்த முறையில் அவர்களது வேஷத்தைக் கலைத்துத் தண்டனை கொடுக்குமாறு அன்னவன் அடியார்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

பரிபாலனசபை தொடங்கிய நாட் தொடக்கம், கடந்த எட்டு வருடங்களுக்கு மேலாக, ஆலயத்திற்கு நேரில் வருகை தந்து அடியார்கள் செலுத்தும் திருப்பணிநிதி, காணிக்கை என்பவற்றைக்கொண்டே ஆலயத் திருப்பணி முதலிய வேலைகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.

பெற்றுக்கொள்ளும் பணம், பொருள், காணிக்கை என்பனவற்றுக்கு உடனுக்குடன் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டுவருகிறது. இப்படி நிதி அளித்தோரின் பெயர்கள் அனைத்தும் ஆண்டுதோறும் வெளியிடப்படும் நிதி அறிக்கைப் புத்தகங்களில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன.

எனவே—

அடியார்கள் அனைவரையும், போலியான இப்படிப்பட்ட மனிதர்கள் விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையோடு இருக்கும்படி மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

பரிபாலன சபை உறுப்பினர்களோ அல்லது கோயில் பூசகர்களோ ஆலயத்திலன்றி வேறு எந்த இடத்திலும் நிதி சேகரிக்கச் செல்வது இடையாது என்பதை அடியார்கள் அனைவருக்கும் நினைவூட்டுகிறோம்.''

சி. கயிலைநாதன்
தலைவர்.
பரிபாலன சபை.

(கி 4340)

---

## ஆலயத்திலும் திருட்டு

[யாழ்ம்பாணம்]

நீர்வேலிஅரசகேசரிப்பிள்ளையார் ஆலயத்தில் ஒரு பரல் தேங்காய் எண்ணெய், திருவாசி, இயந்திரத்தகடு, பக்திப் பாடல் கசற்றுக்கள் உட்பட பலபெறுமதிவாய்ந்த பொருட்கள் நேற்று முன்தினமிரவு திருடப்பட்டுள்ளது. (க)

## கொடூர

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னத் தாக்குதல் கட்டுவனிலிருந்து இடம்பெயர்ந்த திருமதி செல்வலச்சுமி செல்வரட்ணம் (36 வயது) என்ற 4 பிள்ளைகளின் தாயார் தலைசிதறியநிலையில் பலியானார்.

திருமதி சிவசாந்தி புஸ்பநாதன் (35 வயது), எஸ். வேலுப்பிள்ளை (83 வயது) ஆகியோர் காயமடைந்தனர்.

இப்பகுதியில் 12 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் 3 வீடுகள் தரைமட்டமாயின.

இங்கு வீசப்பட்ட நான்கு குண்டுகளில் ஒன்று வெடிக்காத நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

டாக்டர் திருஞானசம்பந்தர், திருமதி து. மகேஸ்வரி, எஸ். துரைராசா, வீ. புஸ்பராசா, டாக்டர் சத்தியசிலன், திருமதி சண்முகநாதன், கே. சபாலிங்கம், பொ. சபாரட்ணம், க. ஆறுமுகம், தயாபரன் ஆகியோரின் வீடுகள் உட்பட 12 வீடுகள் இந்த குண்டுவீச்சினால் சேதமடைந்துள்ளது. தனபாலசிங்கம் என்பவரின் கடை ஒன்றும் தாக்குதலுக்குள்ளானது.

நேற்றுமுற்பகல் 11 மணிக்கு கொக்குவில் பொற்பதிவீதியில் இடம்பெற்ற மற்றொரு விமானத்தாக்குதலில் பொற்பதிப் பிள்ளையார்கோவில்சேதமடைந்துள்ளதுடன் இக்கோயிலுக்கு அருகில் வசிக்கும் லோகநாயகி விஸ்வநாதசர்மா (30 வயது) இவரது பிள்ளைகள் விஜிதா (14 வயது), கௌரி (12 வயது) படுகாயமுற்று (இப் பிள்ளையின்நிலை கவலைக்கிடம்) யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இங்கு நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலில் இருவர்த்தக நிலையங்கள், வீடுகள் சேதமடைந்தன. இதில் ஒரு வர்த்தக நிலையம் முற்றாகச்சேதமடைந்துள்ளது.

எஸ். சேனாதிராசா, எஸ் விஸ்வநாதசர்மா, திருமதி சிவகாமியம்மா, திருமதி துர்க்கையம்மா கோபாலபிள்ளை, பொ. மகிலன், மே. விஜய குமார், வி. கனகசபை ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன. (ஈ-152,135)

## ஈரான்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்தவாரம் முன்வைக்கப் பட்டதும் இதனை அமெரிக்கா நிராகரித்தும், சோவியத் வரவேற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வளைகுடா யுத்தம் ஆரம்பித்த பின் ஐ. நா சபை முதல் தடவையாக 13ம் திகதி புதன்கிழமை கூடவுள்ளது. (சி)

## சனி இடப்பெயர்ச்சி

(யாழ்ப்பாணம்)

வாக்கிய பஞ்சாங்கப்படி இன்று சனிபகவான் தனு ராசியில் இருந்து மகர ராசிக்குஇடம்பெயர்கின்றார் திருக்கணித பஞ்சாங்கப் படி சனிபகவான் கடந்த வருடம் இடப்பெயர்ச்சி அடைந்து வக்கிரகதியடைந்து மீண்டும் மகர இராசிக்கு இடம்பெயர்ந்துள்ளார். (எல்)

## இன்று

(யாழ்ப்பாணம்)

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் முன்னாள் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும், யாழ். மாவட்ட சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகருமான அமரர் சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் கோப்பாய் பிராந்திய ஐக்கிய நாணய சங்கங்களின் ஆதரவில் நடாத்தப்படவுள்ளது. (வி)

## சிவராத்திரிதினம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சேர். பொன். இராமநாதன் வீதியிலுள்ள சத்தியசாயிசேவா சமித்தி மண்டபத்தில் எதிர்வரும் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை மகாசிவராத்திரிதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (153)

## வல்வை

(1ம் பக்க தொடர்ச்சி)

இந்த மகஜரின் பிரதி ஒன்று இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. (51)

## அ. தி. மு. க.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சட்டசபை தேர்தல் விரைவில் நடைபெறலாமென சகலகட்சிகளும் தேர்தலுக்கான ஆயத்தங்களை மேற்கொண்டுவருகின்றன. (சி)

## சந்திரசேகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

தனது எதிரிகளைப் பிரதமர் சந்திரசேகரைப் பயன்படுத்தி வீழ்த்திய திரு ராஜீவ் காந்தி தகுந்த சந்தர்ப்பத்தில் பிரதமரின் காலை வாரிவிடுவாரெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய அரசு கவிழுமானால் புதிதாகப் பொதுத் தேர்தல் நடாத்தப்படுமெனப் புதுடில்லியில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (சி)

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம்10ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/91,